**செய்தி வெளியீடு எண்: 463** **நாள்: 17.07.2018**

**செய்தி வெளியீடு**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே.பழனிசாமி அவர்கள் 16.7.2018 அன்று தலைமைச் செயலகத்தில், பால்வளத்துறை சார்பில் காஞ்சிபுரம் மாவட்டம், சோழிங்கநல்லூர் பால் பண்ணையில் 34 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள அதிநவீன தொழில்நுட்ப பால் பதனிடும் தொழிற்சாலையை காணொலிக் காட்சி (Video Conferencing) மூலமாகத் திறந்து வைத்தார்கள். மேலும், 15 கோடியே 23 லட்சத்து 60 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டிலான கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத்துறை கட்டடங்களை திறந்து வைத்தார்கள்.

தமிழ்நாட்டில் கால்நடைகளின் எண்ணிக்கையை உயர்த்துதல், பால் பண்ணைகளின் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல், பால் உற்பத்தியாளர்கள் உற்பத்தி செய்யும் பாலுக்கு ஆதாயமான விலை கிடைக்கச் செய்தல், நுகர்வோருக்கு தரமான பாலினை நியாயமான விலையில் விற்பனை செய்தல் ஆகியவற்றைக் குறிக்கோளாகக் கொண்டு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழியில் செயல்படும் தமிழ்நாடு அரசு பல்வேறு திட்டங்களை சீரிய முறையில் செயல்படுத்தி வருகிறது.

அந்த வகையில், காஞ்சிபுரம் மாவட்டம், சோழிங்கநல்லூர் பால் பண்ணையில் 34 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள அதிநவீன தொழில்நுட்ப பால் பதனிடும் தொழிற்சாலையை காணொலிக் காட்சி மூலமாக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே.பழனிசாமி அவர்கள் திறந்து வைத்தார்கள். இந்த அதிநவீன தொழில்நுட்ப பால் பதனிடும் தொழிற்சாலையில், ஆவின் நிறுவனத்தால் கொள்முதல் செய்யப்படும் பாலினை 139 டிகிரி செல்சியஸ் வெப்பநிலையில் கொதிக்க வைத்து, பதப்படுத்தி, 200 மில்லி லிட்டர், 500 மில்லி லிட்டர் மற்றும் 1000 மில்லி லிட்டர் அளவுகளில் பால் பைகளில் சிப்பம் செய்யப்படுகிறது. இந்த அதிநவீன தொழில்நுட்ப முறையில் பதப்படுத்தப்பட்ட பால், சாதாரண அறைவெப்ப நிலையிலேயே 90 நாட்கள் வரை கெடாமல் இருக்கும். மேலும், இந்த பால் பைகளை இருப்பு வைக்க குளிர்சாதன பெட்டிகள் தேவையில்லை.

வேலூர் நகரின் மையப் பகுதியான வேலப்பாடியில் 1 கோடியே 6 லட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள அதிநவீன ஆவின் பாலகம்;

கன்னியாகுமரி–நாகர்கோவில் தேசிய நெடுஞ்சாலையில் இளங்காமணிபுரத்தில் 70 லட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள அதிநவீன ஆவின் பாலகம்;

கால்நடை பராமரிப்புத் துறை சார்பில், திருவள்ளூரில் 77 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள கால்நடை நோய் புலனாய்வு பிரிவுக் கட்டடம்; விழுப்புரம் மாவட்டம் – விழுப்புரம் மற்றும் திருக்கோவிலூரில் 1 கோடியே 5 லட்சத்து 60 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 2 கால்நடை மருத்துவமனை கட்டடங்கள்;

மீன்வளத் துறை சார்பில் திருவள்ளூர் மாவட்டம் – பழவேற்காட்டில் 2 கோடியே 15 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மேம்படுத்தப்பட்ட மீன் இறங்குதளம்; திருவள்ளூர் மாவட்டம் – பூண்டியில் 3 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேம்படுத்தப்பட்ட மீன்குஞ்சு உற்பத்தி நிலையம்; கரூர் மாவட்டம் – திருக்காம்புலியூரில் 2 கோடியே 90 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மேம்படுத்தப்பட்ட மீன்குஞ்சு வளர்ப்பு மற்றும் உற்பத்தி மையம்; கரூர் மாவட்டம் – குளித்தலையில் 75 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மேம்படுத்தப்பட்ட மீன்குஞ்சு வளர்ப்பு மையம்; திருநெல்வேலி மாவட்டம் – மணிமுத்தாறு அணையில் 2 கோடியே 85 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மேம்படுத்தப்பட்ட தேசிய மீன் விதைப் பண்ணை மற்றும் பழைய பண்ணை;

என மொத்தம், 49 கோடியே 23 லட்சத்து 60 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டிலான கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத்துறை திட்டங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே.பழனிசாமி அவர்கள் துவக்கி வைத்தார்கள்.

தமிழ்நாடு பால் உற்பத்தியாளர் கூட்டுறவு இணையம் மற்றும் ஒன்றியங்களில் இயங்கி வரும் சொந்தம் மற்றும் ஒப்பந்த வாகனங்களுக்கு எரிபொருள் நிரப்புவதற்காக, இணையம் மற்றும் பல்வேறு ஒன்றியங்களுக்கு சொந்தமான 9 இடங்களில் பெட்ரோல் விற்பனை நிலையம் அமைத்திட இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் நிறுவனம் முன்வந்துள்ளது.

முதற்கட்டமாக சேலம் – நாமக்கல் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றிய பால்பண்ணை வளாகத்தில், ஒன்றியத்திற்கு சொந்தமான 1225 சதுர மீட்டர் இடத்தில், இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் நிறுவனத்தால் அமைக்கப்பட்டுள்ள எரிபொருள் சில்லரை விற்பனை நிலையத்தை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே.பழனிசாமி அவர்கள் திறந்து வைத்தார்கள். இந்த பெட்ரோல் விற்பனை நிலையம் அமைப்பதன் மூலம், சேலம்–நாமக்கல் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியத்திற்கு மாதம் ஒன்றுக்கு வாடகையாக 33 ஆயிரம் ரூபாயும்,

எரிபொருள் விற்பனை தரகு தொகையாக மாதம் ஒன்றுக்கு 1 லட்சம் ரூபாயும் வருமானம் கிடைக்கும்.

தமிழ்நாடு பால் உற்பத்தியாளர் கூட்டுறவு இணையத்தின் செயல்பாடுகளை மேம்படுத்தும் பொருட்டு, இணையத்தில் 20 ஆண்டுகளுக்கு மேலாக இயங்கிக் கொண்டிருக்கும் 17 வாகனங்களை கழிவு செய்து, அதற்கு மாற்றாக, 4 கோடியே 60 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான 15,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட 17 புதிய பால் டேங்கர்கள்; கால்நடை பராமரிப்புத் துறையில் செயல்படுத்தப்பட்டு வரும் வளர்ச்சித் திட்டங்களை செயல்படுத்திடவும், கண்காணித்திடவும், கள ஆய்வுகளை மேற்கொள்ளவும், கால்நடை பராமரிப்புத் துறை அலுவலர்களின் பயன்பாட்டிற்காக 1 கோடியே 75 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான 25 ஜீப்புகள், ஆகிய வாகனங்களை துறைகளின் பயன்பாட்டிற்காக வழங்கிடும் அடையாளமாக 6 ஓட்டுநர்களுக்கு அவ்வாகனங்களுக்கான சாவிகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே.பழனிசாமி அவர்கள் வழங்கினார்கள்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு மீன்வளம், பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத் துறை அமைச்சர் திரு. டி. ஜெயக்குமார், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் திரு.உடுமலை கே. ராதாகிருஷ்ணன், மாண்புமிகு பால்வளத்துறை அமைச்சர் திரு. கே.டி.ராஜேந்திரபாலாஜி, மாண்புமிகு ஊரகத்தொழில் துறை அமைச்சர் திரு.பா. பென்ஜமின், சட்டமன்ற உறுப்பினர் திரு.பி. பலராமன், தலைமைச் செயலாளர் முனைவர் கிரிஜா வைத்தியநாதன், இ.ஆ.ப., தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையத்தின் தலைவர் திரு. அ. மில்லர், கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத் துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் கே.கோபால், இ.ஆ.ப., தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையத்தின் நிர்வாக இயக்குநர் திரு.சி. காமராஜ், இ.ஆ.ப., கால்நடை பராமரிப்பு மற்றும் மருத்துவப் பணிகள் துறை இயக்குநர் திரு. ஏ. ஞானசேகரன், இ.ஆ.ப., மீன்வளத்துறை இயக்குநர் டாக்டர் ஜி.எஸ். சமீரன், இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

* * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**
**நாள்: 17.7.2018**